கொளத்தூர் கிழக்கு 70 (அ) வட்டக் கழகச் செயலாளர்

# டி.சந்திரசேகர் - சி.மீனாட்சி இல்லத் திருமண வரவேற்பு விழா!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை, பிப். 28

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி, 70 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.சந்திரசேகர் சி.மீனாட்சி மற்றும் 70 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதணி இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (28.2.2024 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு, பில்கிங் டன் ரோடு, ஐ.சி.எப். இன் டெக்ரல் கிளப்பில் நடை பெறுகிறது.



திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண வரவேற்பில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா. கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ. வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், கிழக்கு பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, எ.நாகராசன், சரிதா மகேஷ்குமார், தேவ ஜவகர், சி.மகேஷ்குமார், டி.லோகேஷ், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரைக்கண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எம்.தாவூத்பி,

பி.பழனி, சு.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எல். டி.தாமஸ், டி.சந்திரசேகர், பா.அன்பரசு, பி.ஊமைதுரை கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, என். பொன்முடி, கே.பி.ஆதவன் மணி, இரா.தயாளன், எம். சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, பி.அதிபதி, எம்.ஜெ.சி.பாபு, எஸ்.முருகன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், எம். டி.தமிழ்ச்செல்வன், என். ராமச்சந்திரன், பி.அமுதா, டி.யோக பிரியா, கே.சாரதா மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மாவட்டப் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.




தி.மு.கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் கழக இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா. சந்திரபாபு தயாரித்து வழங்கிய 'எம்.கே. ஸ்டாலின் சார் வி லவ் யூ ' என்ற கழகப் பிரச்சார பாடல் ஒளிப்பட நாடாவை கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திரகுமாரி,இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன் பெற்றுக் கொண்டனர்.உடன் புரவலர் வழக்கறிஞர் நா.செந்தில்,பெருநாழி போஸ்,பிரம்மபுரம் பழனி,பாடலாசிரியர் வெ.மதன்குமார் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப. பழனிவேல்

**பிப்ரவரி 28 (2022)**



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை வடலூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - நா.எழிலன் எம்.எல்.ஏ. - கலை கதிரவன் பங்கேற்பு

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி கழக அவசர ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை வேண்டுகோள் !

சென்னை, பிப். 28 -

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழக அவசர ஆலோசனை கூட்டம் 28.02.2024 புதன்கிழமை காலை 09.00 மணியளவில் சென்னை தேனாம்பேட்டை அண்ணா சாலையில் உள்ள காமதேனு திருமண மண்டபத்தில் (TUCS) பகுதி அவைத் தலைவர் எம்.ஆர்.ஜம்புலிங்கம் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் ஜெ. நற்குணநாதன், பா.இராபர்ட், வெற்றிச்செல்வி மாணிக்கம். மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் விஜய், திருமலை பொன்னுரங்கம், எஸ்.எம். கே.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க இருப்பதால் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்துதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் : மார்ச் 1 கழக தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா, மார்ச் 3 அன்று நடைபெறும் பாக நிலை முகவர்கள் கூட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தாம்பரம் மாநகரப் பிரதிநிதிகள் கூட்டம்!

## என்.மருதுகணேஷ் - எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தாம்பரம், பிப். 28 -

தாம்பரம் மாநகர திமுக சார்பில் மாநகர பிரதிநிதிகள் கூட்டம் 25-2-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் டி.ஜி.பி திருமண மண்டபத்தில் மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் எ.மனோகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் என் மருது கணேஷ், தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர்கள் டி. காமராஜ், எஸ் இந்திரன், பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன், ஜெயபிரதீப் சந்திரன் மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். கோபி, ரமணி ஆதிமூலம், சி. ஜெகன், சி.சுரேஷ், பி.புகழேந்தி, லிங்கேஸ்வரி பாபு, எல்.பெரியநாயகம், வி. கார்த்திக், எஸ். ராஜேஷ், ஹேமாவதி, சேகர், சசிகலா, கார்த்திக்கிரிஜா, ஜா.ரவிக்குமார், ஆர்.செல்வகுமார், எம்.ரவிக்குமார், எஸ். சரவணன், இரா.கந்தசாமி, எம். வினோத், ஜி.ஸ்ரீதர்குமார். என்.விஜயன், வி.முனுசாமி, எம்.சீனிவாச குமார், கி.வேல் மணி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கழகப் பேச்சாளர் எஸ். ஜி. கருணாகரன், வாசித்தார் கூட்டத்தில் முதல் இரங்கல் தீர்மானமாக கழகத் தலைமைக் கழகத்தின் துணை மேலாளர் ஜெயக்குமார், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பி.பாரதி

கழக தலைவர் தலைவர் கலைஞர் அவர்களால் 'பன்னீர்செல்வம்' என்று பெயர் சூட்டப்பட்ட மாநகர வர்த்தக அணியின் துணை அமைப்பாளரும் முன்னாள் மாமன்ற உறுப்பினருமான இரா.செல்வகுமாரின் பேரனும் தாம்பரம் நகர தகவல் தொழில் நுட்பு அணியின் அமைப்பாளர் செல்வபிரகாஷ் மகனுமான விஷ்ணுகுமாருக்கும் சிறு வயதாக இருந்தாலும் அவர்களின் தாத்தா, தந்தையுடன் அத்தனை கழக நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும் கட்சியின் மீது மாறாத பற்று கொண்ட அவரின் திடீர் மறைவிற்க்கும் மேலும் தற்போது மறைவுற்ற கழகத் தோழர்களுக்கு இரண்டு நிமிடம் எழுந்து நின்று ஆஞ்சலி செலுத்தப்பட்டது.

2024 - 2025ல் வரலாற்று சிறப்புமிக்க தமிழ்நாடு சட்டமன்ற நிதிநிலை அறிக்கையை வாழ்த்தியும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 71 வது பிறந்தநாள் விழாவை மாநகர முழுவதும் மிகுந்த எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் நலத்திட்ட உதவிகளோடும் கோலாகலமாக கொண்டாடிட தீர்மானமும்

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய கூட்டணி சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளரை மாநகரத்துக்கு உட்பட்ட இரண்டு தொகுதிகளில் அதிக வாக்குகளை பெரும் வகையில் கழகத் தோழர்கள் உழைத்திட வேண்டும் என்ற தீர்மானமும் காணொல்க் காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான 'இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்' என்ற கை பிரதி திண்ணைப் பிரச்சாரத்தை மாநகர் முழுவதும் உள்ள வட்டங்களில் சிறப்பாக விநியோகித்திட தீர்மானமும் கலந்து கொண்ட கழகத் தோழர்களின் கர ஒலி நடுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன

நொளம்பூர் வே. ராஜன் பங்கேற்பு:

# 143வது வட்ட கழக கூட்டம்!

## வட்ட செயலாளர் சி. சசிகுமார் அறிவிப்பு!

சென்னை, பிப்.28-

சென்னை தெற்கு மாவட்ட மதுரவாயல் வடக்கு பகுதி 143வது வட்ட கழக கூட்டம் இன்று (28.2.2024) மாலை 6 மணிக்கு நொளம்பூர் ஸ்ரீராம் நகர் அலுவலகத்தில் வட்ட அவை தலைவர் எஸ். ரகுபதி தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் மண்டலக்குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஜி.மூர்த்தி, என்.மணிகண்டன், கே.ஆறுமுகம், பி.தட்சாயினி பக்தவச்சலம், இ. சாரங்கபாணி, டி.நாகரத்தினம், பி.உமாபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.


அதுபோது தலைவர் பிறந்தநாள் விழா குறித்து கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இக்கூட்டத்தில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட கழக முன்னோடிகள் கழக செயல் வீரர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்ட செயலாளர் சி.சசிகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருத்துறைப்பூண்டி இர.செல்வராசன்

**பிப்ரவரி 28 (1992)**



திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளராகவும் – பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

'மிசா'விலும் மற்றும் தலைமைக் கழகம் அறிவித்த சட்ட எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

குடந்தை, மகாமக குள மரணங்கள் குறித்து நீதிவிசாரணை கோரி, கழகத்தின் சார்பில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் பங்கேற்றபோது மாரடைப்பால் காலமானார்.

"திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கழகச் சிங்கமாக நடைபோட்டு, அடங்காத ஆர்வத்துடன் பணியாற்றிய தம்பி. சாவு முனையிலும் அந்தத் தம்பி கழகப் பணியே ஆற்றியுள்ளார்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. நித்யானந்தம்

**பிப்ரவரி 28 (2020)**



இளமைக் காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜா நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் நகர்மன்றத் தலைவராகவும் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். காத்தவராயன்

**பிப்ரவரி 28 (2020)**



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

பேர்ணாம்பட்டு நகர்மன்றத் தலைவராகவும், 2019ல் நடைபெற்ற குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் பணியாற்றி அவர்கள் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**